DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

-----------------------------------------------------------------------

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.562/2018**

**P.W.8**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | ரோகிணிமீனா |
| Husband Name | : | N.சுரேஷ்பாபு |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026.

( 1, 2 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 11வது எதிரி இறப்பு. 3, 4, 5, 6, 8, 10, 12, 13, 14, 15, 16, 17 மற்றும் 18 எதிரிகள் ஆஜர். 9வது எதிரி ஆஜர் இல்லை. 9வது எதிரி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது கதவு எண்.352, துரைச்சாமி ரோடு, டிவிஎஸ் நகரில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவத்தில் இறந்துபோனவர் என் கணவர் ஆவார். வழக்கு சம்பவ சமயத்தில் **அ.சா.1** டிரைவராக இருந்தார். என்னை போலிஸார்கள் விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. நான் என்னுடைய கணவர் இறந்ததால் மிகுந்த மன அதிர்ச்சியில் இருந்தேன்.எனக்கு இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 29.01.2013ம் தேதி எனது கணவர் டிரைவர் மணிகண்டன் இல்லாமல் நண்பர்களுடன் கொடைக்கானல்

சென்றுவிட்டு 31.01.2013ம் தேதி மதியம் 01.30 மணிக்கு வீட்டிற்கு வந்தார் என்றும் பின்பு 04.30மணியே போல டிரைவர் மணிகண்டனுடன் எங்களது Skoda காரில் எங்கள் யோகா and Co construction அலுவலகத்திற்கு சென்றார் என்றும் இரவு சுமார் 07.50 மணியை போல் வீட்டிற்கு வருவது போல டிரைவர் மணிகண்டனுடன் எங்களது காரில் சத்திய சாய் நகர் மெயின்ரோடு, முருகன் கோவில் ரோடு, சந்திப்பில் வரும் போது டூவிலரிலும், டாடா ஏஸ் என்ற குட்டி யானை வண்டியில் வந்த நபர்கள் பயங்கர ஆயுதங்களுடன் எனது கணவர் வந்த காரை வழிமறித்து அடித்து உடைத்தும், எனது கணவரை வெட்டியும், குத்தியும் இரத்த வெள்ளத்தில் போட்டுவிட்டு தப்பி சென்றதாக எனது டிரைவரான ராஜா தகவல் சொன்னதன் பேரில் சென்று பார்க்க மேற்படி எனது கணவர் குத்துவெட்டு காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் குப்புற கொலை செய்யப்பட்டு இறந்துகிடந்தார் என்றும் எனது கணவரை திட்டம் போட்டு படுகொலை செய்துவிட்டு தப்பி சென்றுள்ளனர் என்று போலீஸ் விசாரணையில் கூறி தற்போது நீதிமன்ற விசாரணையில் தெரிவித்துள்ளேன் என்றால் நான் சொன்னேனா என்று எனக்கு தெரியாது.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :– இல்லை.</u>**

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.02.11 14:40:30 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.